DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.88/2024

**P.W**. 4(LW5)

| | |
|---|---|
| Name | : **திரு.தரணி** |
| Father/Husband Name | : திரு. வாசுதேவன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.04.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது லட்டுர் பாளையம் கிராமத்தில் குடியிருந்து சொந்தமாக கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். சாட்சி சுரேஷ்குமார் எனக்கு தெரியும். என் வீட்டிலிருந்து 3 வது வீட்டில் வசித்து வந்தார். ஆஜர் எதிரிகள் குமுதா மற்றும் சாமிதுரை ஆகியோரை எனக்கு தெரியும்.

2) சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலையில் ஆஜர் எதிரிகளுக்கும் சுரேஷ்குமாருக்கும் இடம் சம்மந்தமாக பிரச்னை இருந்ததால் அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டு சண்டை போட்டுக் கொண்டதாக தெரிந்துக் கொண்டேன். இது குறித்து காவல் நிலையத்தில் சுரேஷ்குமார் புகார் கொடுத்தாக கேள்விப்பட்டேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அரசு தரப்பில் கோரப்பட்டு அது நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

எங்கள் ஊரில் வசித்து வரும் சுப்பிரமணி மற்றும் சாமிதுரை ஆகியோரின் குடும்பத்திற்கு ஏற்கனவே வீட்டு மனை சம்மந்தமான பிரச்னை இருந்து வந்தது என்றால் சரிதான். கடந்த 07.04.2023 ம் தேதி காலை 6.30 மணியளவில் நானும், எனது ஊரை சேர்ந்த சேகர் என்பவரும் எங்கள் தெருவில் நின்று பேசிக் கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது சாமிதுரை அவரது வீட்டின் முன்பு நின்றுக் கொண்டு சுரேஷ்குமார் என்பரை பார்த்து அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. அப்போது சாமிதுரையின் உறவினர் குமுதா, சுரேஷ்குமாரை பார்த்து அசிங்கமாக பேசி கையால் அடித்தார் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி சாமிதுரை, சுரேஷ்குமாரை அருகில் இருந்த செங்கல்லை எடுத்து அடித்து காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. மேலும், சாமிதுரை, சுரேஷ்குமாரை பார்த்து கொன்றுவிடுவதாக மிரட்டினார் என்றால் சரியல்ல. இது குறித்து போலிசார் விசாரணையில் நேரடியாக பார்த்ததாக சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளும், புகார்தாரும் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.

D E P O S I T I O N  O F  W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.88/2024

**P.W**. 5(LW6)

| | |
|---|---|
| Name | : **திரு.லிங்கேஷ்வரன்** |
| Father/Husband Name | : திரு. கேசவன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.04.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது லட்டுரில் குடியிருந்து கார்பெண்டராக வேலை செய்து வருகிறேன். சாட்சி பார்த்தசாரதி என்னுடைய மாமா மகன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

2) சாட்சி சுரேஷ்குமாரை எனக்கு தெரியும். அவர் என்னுடைய மாமா மகன் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் என்னுடைய உறவினர்கள். சுரேஷ்குமாருக்கும், ஆஜர்எதிரிகளுக்கும் சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு சண்டை நடந்ததாக கேள்விப்பட்டு தெரிந்துக் கொண்டேன். அந்த சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்திருப்பதாக கேள்விப்பட்டேன். என்னிடம் காட்டப்படும் கையெழுத்தை சண்டை நடந்த மறுநாள் என்னுடைய கடைக்கு அருகில் போட்டேன். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு பகல் 11.00 மணியளவில்

போலிசார் ஒருவர் சம்பவ இடம் வந்து பார்வையிட்டு படம் வரைந்துக் கொண்டிருந்தார். அதில் என்னையும், பார்த்தசாரதி என்பவரையும் சாட்சியாக இருக்கும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க நானும் பார்த்தசாரதியும் கையொப்பம் செய்தோம். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் என்னுடைய கடையில் தான் இருந்தேன். நான் மரக்கடை வைத்துள்ளேன். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. படம் வரைந்துக் கொண்டிருந்தார்கள். இந்த வழக்கில் சாட்சி பார்த்தசாரதி என்னுடைய உறவினர் ஆவார். புகார் கொடுக்க சுரேஷ்குமார் சென்றபோது நானும் அவருடன் சென்றேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புகார்தாரர் சுரேஷ்குமார் என்னுடைய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவம் நடந்த போது சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் போலிசார் சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், அதில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.